பக்கங்கள் 20 + 03

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 25 வெள்ளிக்கிழமை 08.03.2024 அதிர்வு 221

# மீனவர்கள் மூவர் மாயம்

ஈச்சங்காடு பிரதேசத்திலிருந்து மீன் பிடிக்கக் கற்பிட்டி கடலில் இருந்து புறப்பட்ட படகொன்று மீண்டும் கரை திரும்பவில்லை என்று படகின் உரிமையாளர் 04



# ஐ.எம்.எவ். பிரதிநிதிகளுடன் கலந்துரையாட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் வாய்ப்பு

## திங்கள் சந்திப்புக்கு சஜித், அநுர, சிறீதரனுக்கு ஜனாதிபதி அழைப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள் ளப்பட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங் குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவ டிக்கை எடுத்துள்ளார். 04





# இலங்கையை ராஜபக்ஷக்கள்தான் தொடர்ச்சியாக ஆள வேண்டுமாம்

## மொட்டுக் கட்சி எம்.பி. கூறுகின்றார்

"ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்பது பாவம் அல்ல. எனவே, ராஜபக்ஷக்கள் இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆள்வதையே நான் விரும்புகின்றேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

'மூன்றாவது முறையாகவும் ராஜ பக்ஷ ஒருவர் ஜனாதிபதியாக வருவதை நீங்கள் விரும்புகின்றீர்களா?' என எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த 04





# திருக்கேதீஸ்வர ஆலய சிவராத்திரி மட பரிபாலன சபை நடத்திய பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

**(மன்னார் நிருபர்)**

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய சிவராத்திரி மட பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை திருக்கேதீஸ்வரம் சிவ ராத்திரி மடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் கே. கனகேஸ்வரன் கலந்துகொண்டார்.

மேற்படி போட்டியில் வடக்கு மாகா ணத்தில் 5 மாவட்டங்களில் இருந்தும் போட்டியிட்ட போட்டியாளர்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டது.

நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபையினர், பிரதேச செய லாளர் உட்பட அழைக்கப்பட்ட திணைக் கள தலைவர்களும் கலந்துகொண்டனர்.













# யாழ். செயலகத்தில் நடைபெற்ற ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

(த.சுபேசன்)

யாழ். மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் , கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீஷன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், பல்துறை சார் அரச உயர் அலுவலர்கள், கிறிசலிஸ் நிறுவன திட்ட முகாமையாளர் மகேஸ்வரன் பிரபாகரன், சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் அரசகேசரி கிறகர் ஜொகான்சன், பால்நிலை கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசகர் பு. தர்மேந்திரா, சமூக பொருளாதார ஆலோசகர் செல்வின் இரணியல், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் செல்வி. சாந்தாதேவி தர்மரட்ணம், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் உறுப்பினர்கள்



ஒன்றிய அங்கத்தவர்கள் மற்றும் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அதற்கான தீர்வுகள் மற்றும் பிரச்சினைகளை வெற்றி கொண்டு எதிர்கால செயற் பாடுகளுடன் முன்னோக்கிப் பயணித்தல் உள்ளிட்ட விட யங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.




# மக்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மகிழ்ச்சி முகாம்

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவின் கீழ் இறக்காமம் -05 ஆம் பிரிவு நியூகுன பிரதேசத்தில் இயங்கும் யஷே ாதரா மகளிர் சங்கமும், உளச் சுகாதார முன்னேற்றத்துக்கான நிறுவனமும் இணைந்து பொது மக்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மகிழ்ச்சி முகாமை ஏற்பாடு செய்திருந்தன.

அந்த கிராமத்தில் உள்ள முதியவர்கள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள், விசேட தேவையுடையவர்கள், கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் என அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில் இந்த மகிழ்ச்சி முகாம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்



ஷெய்க் எம்.எஸ்.எம். றஷ்ஷான் கலந்து கொண்டார்.

உளச்சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனத்தின் தலைவரும் சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தின் அம்பாறைமாவட்டஇணைப்பாளருமான பிரகீத், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேகா எதிரி சிங்க, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.கே. சாஜிதா மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த மகிழ்ச்சி முகாமில் உளவியல் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள், மகிழ்ச்சிகரமாக வாழும் கலை, முரண்பாடுகளை இனங்காணலும் முகாமை செய்தலும், இளைஞர்களுக்கான வழிகாட்டல்கள் நிகழ்வுகள், குழுப் பயிற்சி மற்றும் செயற்பாடுகள், சிறுவர் விளையாட்டுகள், சித்திரம் வரைதல் போட்டிகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் என முழு நேரத்தையும் பங்குபற்றுநர்கள் மகிழ்ச்சிகரமாக வைத்திருக்கும் வகையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் தீச் சுடர் முகாம் நடைபெற்றது. பங்குபற்றுநர்களின் விசேட கலைத் திறமைகள், ஆற்றல்கள் என்பன அரங்கேற்றப்பட்டன.

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் சமர்ப்பித்துள்ள நம்பிக் கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளது.எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட 44 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையொப் பமிட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை



அண்மையில் நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் சமிந்த குலரத் னவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையை விவா தத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள திகதி குறித்து நாடாளுமன்ற விவ காரங்களுக்கான குழுவால் தீர்மா னிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சிறுத்தையின் சடலம் மீட்பு

## ஒருவர் சந்தேகத்தில் கைது

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை, கட்டுக்கலை தோட்டத் திலுள்ள வீடொன்றுக்கு அருகில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் ஒன்று இன்று மீட்கப்பட்டுள்ளது என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக் கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற



பொலிஸார், சிறுத்தையை மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்தனர்.

உயிரிழந்த சிறுத்தையின் சடலம் மரண பரிசோதனைக்காக இரந்தனிகல வனவிலங்கு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.சந்தேகந பரை நுவரெலியா நீதி வான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு மாகாணத்தில் சமாதான விருது

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய் யப்பட்ட சமாதான செயற்பாட்டாளர்கள் மூவருக்கான கௌரவ விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சமாதான செயற் பாட்டாளர்களுக்கான "PEACE LEADERS AWARD" எனும் விருதே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டது.

இந்தச் சமாதான விருதுக்கு சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித் திருந்தனர். இதில் "GAFSO" எனும் நிறுவனம் தகுதியான மூவரை மட்டும் தெரிவு செய்தது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மீனவர்கள்....

கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

ஈச்சங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 21, 37 மற்றும் 38 வயதுடைய மூவர் இந்தப் படகில் மீன்பிடிப்பதற்காகச் சென் றிருந்தனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடற்படையினருக்குத் தகவல் தெரிவித்துள்ள நிலையில் தேடு தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன என்று பொலிஸார் தெரிவித் துள்ள னர்.

### ஐ.எம்.எவ்....

அதன்படி, எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையா டலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸா நாயக்க (தேசிய மக்கள் சக்தி), சிவஞா னம் சிறீதரன் (இலங்கைத் தமிழரசுக் கட்சி) ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதுடன், அவர்களுடன் கலந்து கொள்ள விரும்பும் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இதில் பங்கேற்குமாறு நாடா ளுமன்றத்தின் நிதிக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன் னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதோடு, அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் கூட்டுப் பொறுப்புக்கூறல் அவசியமானது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலா பிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செய லாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே. எம். மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர். - என்றுள்ளது.

### இலங்கையை...

ரோஹித அபேகுணவரதன,

"மூன்றாவது பரம்பரையாக அல்ல ராஜபக்ஷக்கள் தொடர்ச்சியாகப் பதவியில் இருப்பதை விரும்புகின்றேன். எனக்கு கட்சி தாவும் பழக்கம் கிடையாது. ஒரே அணியில்தான் இருக்கின்றேன். மஹிந்த ராஜபக்ஷ ராஜபக்ஷ என்ற தலைவர் இந்த நாட்டுக்குப் பெரும் சேவையாற்றியுள்ளார். எனவே, ராஜபக்ஷ க்கள் பக்கம் நிற்பது பாவம் அல்ல." - என்றார்.

அதேவேளை, "தேர்தல் ஆட்டத்துக்கு நாம் தயார். மட்டை தயாராகவே உள்ளது. எந்தப் பந்து வந்தாலும் அடித்தாடத் தயார். அது ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் தயார். நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் தயார்." - என்று குறிப்பிட்டார்.



# அட்டாளைச்சேனையில் சிரமதானம்; ஞாயிற்றுக்கிழமை நடத்தத் தீர்மானம்!

**(கே. எ. ஹமீட் )**

அட்டாளைச் சேனையில் நாளை மறுதினம் மாபெரும் சிரமதான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், அக்கரைப்பற்று நீர்ப்பாசன திணைக்களம், அட்டாளைச்சேனை பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், அட்டாளைச்சேனை கோட்டக்கல்வி அதிகாரி அலுவலகம், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம், கரையோர பாதுகாப்பு திணைக்களம், அட்டாளைச்சேனை அல் இபாதா கலாச்சார மன்றம், அட்டாளைச்சேனை கோணாவத்தை அபிவிருத்தி குழு, ஒன்றிணைந்து இந்தப் 13 ஆவது வருட சிரமதான நிகழ்வை நடத்தவுள்ளன.

இந்தச் சிரமதானத்தை நடத்துவது தொடர்பான விசேட



கூட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி. ரி.எம்.இர்பான் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

# கடையாமோட்டை தேசிய பாடசாலையில் 2023 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு!

**(எம்.எச்.எம் சியாஜ்)**

புத்தளம், தெற்கு கோட்டத்துக்கு உட்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) 2023 ஆம் கல்வி ஆண்டுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம். தௌபீக் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும், முந்தல் மதுரங்குளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ஏ.எச்.எம். ஹாரூன் விஷேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாய் படாத பாடு

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னைக்கோன் புதிய பாது காப்புப் பிரச்சனை ஒன்று தொடர்பாக நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை ஒலி - அபாய மணி - ஒலித்திருக்கின்றார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 62 லட்சம் கட்டாக்காலித் தெரு நாய்கள் சுற்றித் திரிகின்றனவாம்.

இதனால் பெரும் ஆபத்து நிலை ஏற் பட்டிருப்பதாக அவர் சுட்டுகின்றார்.

பொருளாதார ரீதியில் முடங்கிப் போன இலங்கைத் தீவு அதிலிருந்து மீளுவதற்கான பகீரதப் பிரயத்தன முயற்சியில் ஈடுபட்டி ருக்கின்றது. அதில் ஒன்று, அந்நிய செலா வணியை ஈட்டித் தரக்கூடிய வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவிப்பதாகும். ஒரு மாதத்தில் இரண்டு லட்சத்துக்கும் அதிக உல்லாசப் பயணிகள் என்ற அபரிமிதமான வரு கையை - குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை - அந்தத் துறை ஏற்கனவே எட்டியிருக்கின் றது என்பது மறுக்க முடியாத உண்மை.

நாட்டுக்குள் வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் நலனோம்புகை விடயத்தில் தெரு நாய்களின் இடைஞ்சல் உச்சமாக இருப்பதாகச் சுட்டிக் காட்டப் படுகின்றது.

உல்லாசப் பயணிகள் படையெடுக்கும் சிகிரியா போன்ற சுற்றுலாவிகளின் மையங்களையே தெரு நாய்கள் கூட்டம் ஆக்கிரமித்திருப்பதாகப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் நாடாளுமன்றத்தில் விசனத்துடன் சுட்டிக்காட்டுகிறார்.

சிறுபான்மை இனத்தவர்களை - மனிதர்களை - கேட்டுக்கேள்வியின்றிக் கொன்றொழிக்கும் சரித்திரம் படைத்த இந்த பௌத்த, சிங்கள தேசத்திலே, புத்தரின் பௌத்த சீலம் தெருநாய்கள் போன்ற கட்டாட்காலிகள் விடயத்தில் மட்டும் தாராளமாக - உச்சமாக - பேணப்படுகின்றது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வரை ஊர்களிலே பெருகிவரும் தெரு நாய்களை - கட்டாக்காலிகளை - உள்ளூ ராட்சி சபைகளே வளைத்துப் பிடித்துத் தீர்த்து கட்டுவதன் மூலம் கட்டுப்படுத்தும் ஒரு பொறிமுறை செயற்படுத்தப்பட்டு வந்தது. அது இப்போது இல்லை. அந்த முறைமையைக் கைவிட்டுப் பல தசாப் தங்கள் கடந்து விட்டன.

2005இல் அதிகாரத்துக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவினால் நடைமுறைப்படுத்தப் பட்ட 'மஹிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ் நாய்களைக் கொல்வது ஜீவகாருண்யத் துக்கு முற்றிலும் எதிரானது என்று அர்த்தப் படுத்தப்பட்டது. அதன் காரணமாக அந்த முறைமை அடியோடு கைவிடப் பட்டு சுமார் இரண்டு தசாப்தங்களாகின்றன.

கட்டாக்காலிகளைப் பிடித்துக் கருத் தடை செய்யும் விஞ்ஞான முறைமையை சுகாதார அமைச்சு பெரும் பொருள்செல வில் செய்கின்றது. எனினும் தெருநாய்க ளின் எண்ணிக்கையின் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் இந்த முயற்சி வெறும் விழலுக்கு இறைத்த நீர்தான்.

ஜீவராசிகள் நலன் தொடர்பான சர்வதேச பட்டயங்களில் இலங்கை ஒப்பமிட்டுள் ளது. அது சம்பந்தமான விடயங்கள் இன்னும் நாடாளுமன்றத்தில் முன்நகர்த்தப் பட்டு, சட்டமாக்கப்படாவிட்டாலும் அந்தப் பட்டயங்களில் ஒப்பமிட்ட தரப்பு என்ற முறையில் கட்டாக்காலிகளை ஒழிப்பதில் சில வரையறைகளைப் பேண வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உண்டு.

கட்டாக்காலி நாய்கள் மட்டுமல்ல, இலங்கையின் வன ஜீவராசிகள் தொடர் பான சட்டங்கள், நடவடிக்கைகள் காரணமாக இயற்கைச் சமநிலையையே மோசமான முறையில் பாதிக்கத்தக்க விதத்தில் சில ஜீவராசிகளின் எண்ணிக்கை கட்டுமட்டுமில்லாமல் அதிகரித்து வரு கின்றது.

நாய்களுக்கு அப்பால், மயில்கள், குரங் குகள் போன்றவற்றின் அதீத பெருக்கமும் மனித வாழ்வியலுக்கான இயற்கைச் சமநிலையில் கடும் தாக்கத்தை - பாதிப்பை - ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகின்றது.

இப்படி பராமரிக்க முடியாத அளவுக்கு கட்டாக்காலிகளின் பெருக்கத்தை அனு மதிப்பது கூட ஒருவகையில் ஜீவகாருண் யம் இல்லாத செயற்பாடுதான்.

கட்டுப்பாடு இல்லாதமையால் நாய்க ளின் பெருக்கம் அதிகரித்து உள்ளது. இதனால் நாய்களின் எண்ணிக்கை அதி கரித்து, அவை உணவின்றி பட்டினி, நோய், காயங்கள், பாதுகாப்பு இன்மை போன்றவற்றினால் பெருமளவு சாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஆபத்தை அவற்றுக்குக் குறைக்கச் செய்யும் விதத்தில் நாய்ப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது கூட ஒருவகையில் ஜீவகாருண்யம்தான்.

# வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை உத்தியோகத்தரைப் பாதிக்காதவாறு மாற்றுக!

## ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தது இலங்கை கல்வி நிர்வாக சேவை வாண்மையாளர் சங்கம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களைப் பாதிப்படையச் செய்யும் வகையில் வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை உள்ளது. அதனை தேசிய இடமாற்றக் கொள் கைக்கு அமைவாக திருத்தம் செய் யுங்கள். இந்தத் திருத்தத்தின் போதும் இடமாற்றச் சபையிலும் சங்கத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யுங்கள். தவறான இடமாற்றத்தை இடைநிறுத்த வும் நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு இலங்கை கல்வி நிர்வாக சேவை வாண்மையாளர் சங்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண கல்வி நிர்வாக சேவை இடமாற்றத்தின் போது விதி மீறல்கள், பாரபட்சங்கள், முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதைச் சுட்டிக் காட்டி சங்கத்தின் செயலாளர் ஈ.எம்.ஆர். ஏக்கநாயக்க ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு,

வடக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரின் NP/03/02/GA/1/SLEAS Transfer இலக்கமிடப்பட்டதும் 2024. 01.16 ஆம் திகதிய கடிதம் மூலம் வெளி யிடப்பட்டுள்ள இடமாற்றப்பட்டியலின் படி, இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களான எமது சங்க உறுப்பினர்கள் தமக்கு வழங் கப்பட் டுள்ள வருடாந்த இடமாற்றங்கள் முறை யற்றதும் பாரபட்சமானது எனவும் தெரி வித்துள்ளனர். இது தொடர்பில் எமக்கு முறையிட்டுள்ளனர். அவற்றை ஆராய்ந்த நிலையில் பின்வரும் விடயங்களைத் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

1. 32/2022 ஆம் இலக்க தேசிய இடமாற்றக் கொள்கை சுற்றறிக்கையின் உபபிரிவு 2.3 இன் குறிப்பு (i) இன் படி ஒரு சேவை நிலையில் இருந்து இன்னொரு சேவை நிலையத்துக்கு ஆறு வருட சேவையைப் பூர்த்தி செய்த இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவது என்பது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இடமாற்றச் சுற் றிக்கையில் ஐந்து ஆண்டுகளாக சுருக் கப்பட்டு, மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றமாக மாற்றப்பட்டிருப்பது அடிப்படையில் தவறானதும், எமது உத்தியோகத்தர்களைப் பாதிப்படையச் செய்வதுமாகும்.

2. ஒரு சேவை நிலையத்தில் இருந்து 50 வீதத்துக்கு உட்பட்ட உத்தி யோகத்தர்களையே இடமாற்றம் செய்ய முடியும். ஆயினும் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் தவிர்ந்த சேவை நிலையங்கள் 13இல் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் தவிர்ந்த ஏனைய இடங்களில் 50 வீதத்துக்கு மேலான உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய் யப்பட்டுள்ளனர். தீவக வலயத்தில் 100 வீத உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண கல்விக் கட்டமைப்பில் பாரிய சிதைவை இது ஏற்படுத்தியுள்ளது. எமது உத்தி யோகத்தர்களையும் அசௌகரியப்ப டுத்தியுள்ளது.

3. 32/2022 ஆம் இலக்க தேசிய இடமாற்றக் கொள்கை சுற்றறிக்கையின் பிரிவு 5.12 இல் குறிப்பிடப்பட்ட "இட மாற்ற சபையால் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும்போது உரிய நிறுவகத்தின் பணிக் குழுவின் கனிஷ்ட, சிரேஷ்ட சமநிலையைக் காப்பதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்" என்பது மீறப்பட்டுள்ளது. இது சிரேஷ்ட, கனிஷ்ட உத்தியோகத்தர்களின் உரி மையை பாதிப்பதாகும்.

4. வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை உத்தியோகத்தர்களின் நலன்களைப் பாதிக்கும் வகையிலும், பக்கச்சார்பான தீர்மானங்களை மேற்கொள்ளத்தக்க வகையிலும் அமைந்திருப்பது முறைகேடுகளுக்கு மேலும் வழிவகுக்கும்.

5. வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை மீறும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தில் சிலரை மாவட்டத்துக்குள் இடமாற்றம் செய்திருப்பதும், மேன்முறையீட்டின் பின்னர் மேலும் சிலருக்கு சலுகை வழங்கப்பட்டிருப்பதும் நடைபெற்றுள் ளது. இது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பாரபட்சம், முறைகேடு, சிலரைப் பாதுகாத்து, சிலரைப் பழி வாங்கும் செயற்பாட்டை வெளிப்படுத்து வதாக உணர முடிகிறது.

6. இடமாற்றக் கொள்கை தயாரிப்பு மற்றும் இடமாற்றக் குழுச் செயற்பாட்டில் எந்தவொரு இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தொழிற் சங்கத்தினதும் பிரதி நிதித்துவம் இடம்பெறாமை அடிப்படை யில் மிகத் தவறானதாகும். இதுவும் முறைகேடுகளுக்கு வழிவகுத்துள்ளது.

7. திணைக்களத் தலைவரே இடமாற் றக் கொள்கை தயாரிப்பிலும், இடமாற்ற சபையிலும் இடம்பெற்றிருப்பது தவறா னதாகும். இதன் மூலம் அதிகார துஷ்பிர யோகம் மற்றும் முறைகேடுகள், பழி வாங்கல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்ற எமது உறுப்பினர்களின் குற்றச் சாட்டு மேலும் உறுதி செய்யப்பட்டி ருக்கிறது.– என்றுள்ளது.

# மன்னார் – யாழ்ப்பாணம் பயணிக்கும் அரச பஸ்களின் அவல நிலைமை!

(மன்னார் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னா ருக்குப் பயணிகளை ஏற்றிவரும் அரச பஸ்ஸின் நிலை மிகவும் மோசமாக காணப்படுகிறது என்று பொது மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வரு கின்றனர்.

மன்னார் மாவட்டப் போக்குவரத்துச் சாலை பஸ்களின் நிலை கவலைக்கு இடமாக காணப்படுகின்றன. இதனால் தூர பயணத்தின் போது பஸ்கள் நடு வீதியில் அடிக்கடி பழுதடைகின்றன என்று பயணிகள் குற்றம் சுமத்துகின் றனர்.

தொலைதூர பயணத்துக்குத் தகுதி யற்ற பஸ்கள் அதிக சேவையில் ஈடுபடு வதாகவும் இதனால் பல்வேறு அசௌக ரியங்களுக்கு ஆளாகின்றனர் என்றும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பாக மன்னார் சாலை முகாமையாளர்




கலந்து கொண்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் அரச அதிபர் தலைமையிலான கூட்டங்களிலும் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள் எப்படவில்லை என்று விசனம் தெரிவிக் கப்பட்டுள்ளது.



# கிழக்குப் பட்டப்பின் கற்கை பீடத்துக்கு முதலாவது பீடாதிபதி பதவியேற்றார்!

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக் கழகப் பட்டப் பின் கற்கைகள் பீடத்தின் முதல் பீடாதிப தியாகப் பேராசிரியர் ஜீவரெத்தினம் கென்னடி பதவியேற்றுள்ளார்.

கடந்த முதலாம் திகதி இவரது பதவி யேற்பு இடம்பெற்றது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் இந்தப் பீடத்தைத் தொடங்குவதற்கான அனும திக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளி யாகி, பெப்ரவரி மாதம் முதலாம் திகதி 2023 ஆம் ஆண்டு வைபவரீதியாக இந்தப் பீடம் திறந்துவைக்கப்பட்டது.

அதன் பின்னர் அந்தப் பீடத்துக்கான பீடாதிபதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்கான நேர்முகத்தேர்வு கள் இடம்பெற்று, கிழக்குப்பல்கலைக் கழக மூதவையால் அங்கிகரிக்கப்பட்டுப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பட்டப்பின் கற்கைகள் பீடத்தின் முதல் பீடாதிபதியின் நியமனம் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் இடம்பெற்றுள்ளது.

பேராசிரியர் ஜீவரெத்தினம் கென்னடி கடந்த 26 வருடங்களாக பல்கலைக்கழ கச் சேவையில் ஈடுபட்டு வருவதுடன், பலவகையான பதவிகளையும் வகித் துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில், பட்டப்பின் கற்கைகள் பீடத்தின் முதல் பீடாதிபதி பேராசிரியர் ஜீவரெத்தினம் கென்னடி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனை ஸாஹிரா அலுவலகம் பழைய மாணவர்களால் புனரமைப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் 1991 தொடக்கம் 1996 வரை ஒரே வகுப்பில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் அனுசரணையில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட உதவி அதிபருக்கான அலுவலக அறையை கையளிக்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு அண்மையில் மாணவ சமூகத்தின் தலைவர் பொறியியலாளர் முஹமட் றிஸ்கான் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் கல்முனை சாஹிராக் கல்லூரிக்கு உதவி அதிபருக்கான அலுவலகம் ஒன்றை புனர்நிர்மாணம் செய்து தருமாறு பாடசாலை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த வேண்டுகோளுக்கு அமைய இந்த மாணவர்கள் அதற்கான நடவடிக் கைகளை மேற்கோண்டனர்.



வெளிநாடுகளில் வாழும் வகுப்புத் தோழர்களின் பங்களிப்பில் சமார் 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பாவ னைக்கு கையளித்துள்ளனர். இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# வாகரை கண்டலடி மீன்பிடி துறைமுக பாலம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு!

(பழுவூரான்)

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமியப் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வீதிகள் மற்றும் பாலங்கள் போன்றன முன்னுரிமை அடிப்படையில் செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மீனவர்களின் முக்கிய தேவையாகவும், மிக நீண்ட கால பிரச்சினையாகவும் காணப்பட்ட வாகரை கண்டலடி துறைமுகப் பாலமானது 2.4 மில்லியன் ரூபா செலவில் செப்பனிடப்பட்டு சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது கோறளைப் பற்று வடக்கு பிரதேச செயலாளர் ஜீ.அருணன், வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளர் எந்திரி லிங்கேஸ்வரன் உட்பட வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், முக்கியஸ்தர்கள், பொது மக்கள கலந்து கொண்டனர்.



# கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு கலந்துரையாடல்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தில் நீண்ட நாள்களாக நிரந்தர தீர்வுகள் இன்றிக் காணப்படும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் கற்பிட்டி பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கழிவு முகாமைத்துவம் பற்றிய முழுமையான விளக்கம் வடமேல் மாகாண கழிவு முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏ. மாரசிங்கவால் வழங்கப்பட்டது.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை தீ இட்டு எரிப்பதில் இருந்து விலகி மீள் சுழற்சி முறையினை நடைமுறைப்படுத்தல் என்ற கருத்து இதன் போது முன்வைக்கப்பட்டது.


இந்தக் கலந்துரையாடலில் கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர், உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள், மத ஸ்தானங்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள், மீனவ சங்கத் தலைவர்கள், சமூக சேவை ஆர்வலர்கள், அரச சார்பற்ற நிறுவனங் களின் பணிப்பாளர்கள், கல்விப் பணிமனையின் அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பெண்களுக்கு அடிக்கடி ஏற்படும்
# சிறுநீரக புறவழி அழற்சி நோய்?

பெண்களுக்கு அடிக்கடி ஏற்படும் சிறுநீரக மற்றும் அதன் புறவழி அழற்சி நோய் என்றால் சிறுநீரகம் எமது உடலின் பின்பகுதியில் விலா எலும்புக்குக் கீழாக, உதரவிதானத்துக்குக் கீழ் அமைந்துள்ளது. இந்த சிறுநீரகங்களில் இருந்து செல்லும் சிறுநீர்க் குழாய்கள் சிறுநீர்ப்பையை அடைகின்றன. சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீரை வெளியேற்ற 'சிறு நீர் புறவழி தாரை உதவுகிறது. பெரும்பாலும், சிறுநீர்ப் புறவழி தாரைகளிலேயே அழற்சி ஏற்படுகிறது. அதன் பின்னர் அது சிறுநீர்ப் பைக்கு பரவி அங்கிருந்து சிறுநீரகம் வரை கிருமிகள் செல்கிறது.

**யாருக்கு ஏற்படும்?**

ஒருவரின் சிறுநீரில் 1,00,000 கிருமிகள் ஒரு மில்லி சிறுநீரில் இருக்குமாயின் அவருக்கு சிறுநீர் புறவழி அழற்சி ஏற்பட்டுள்ளது என்று அறியலாம். குறிப்பாக நோயாளிகளில் ஒரு சதவிகிதத்தினர் இந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பெண்களே ஆவர்.




எனவே, அழற்சி, சிறுநீர்ப் புறவழி தாரை, சிறுநீர்ப்பை, சிறுநீர்க் குழாய், சிறுநீரகம் என்பன கீழிலிருந்து மேல் பகுதி வரை எங்கு வேண்டுமானாலும் தொடங்கி மற்ற இடத்துக்குப் பரவிவிடலாம்.

**பெண்களுக்கு அதிகமாக ஏன் அழற்சி ஏற்படுகிறது?**

பெண்களில் 3 வீதமானோருக்கு 20 வயதிலேயே இதுபோன்ற அழற்சிகள் ஏற்படுகிறது. 30 வயதிலே 4 சதவிகித பெண்கள் இதுபோன்ற அழற்சி நோயால் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாகச் சொல்லுவதாயின் 50 சதவீத பெண்கள் பருவமடைந்த பின்பு இந்த நோய்க்கு ஆட்படுகிறார்கள்.

ஆண்களை விட பெண்களுக்கு இந்த அழற்சி ஏற்படுவதற்கு, 'சிறுநீர்ப் புறவழி தாரை' குறுகலாக இருப்பதுவும் அதன் வெளிப்புறத்தில் முடியுமிடத்திலுள்ள வெளித்துளையின் மூலம் அழற்சி ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக இருப்பதுவும் ஒரு காரணமாகும். ஆண்களது சிறுநீர்ப்பைக்கு அருகாமையிலுள்ள "முன் வாயில் சுரப்பி" (பிராஸ்டேட்) நீர் கிருமிகளுக்கு எதிராகச் செயற்படக்கூடியது. இந்த சுரப்பி பெண்களுக்கு இல்லாததும் ஒரு காரணமாகும்.

உடலுறவின்போது, ஆண்குறி சிறுநீர் வெளிப்புற துளையில் உராய்வதால், காயம் ஏற்பட வாய்ப்புண்டு. இதனாலும் வெளிப்புற கிருமிகள் தோல், புழை பகுதிகளிலிருந்து சிறுநீர்ப்புற வழி தாரைக்குள் நுழைய வாய்ப்புண்டு.

**அழற்சி ஏற்பட காரணங்கள்?**



தொகுப்பு:
பைஷல் இஸ்மாயில்

அடிக்கடி குழாய்களை உட்செலுத்துவதாலும் சிறுநீர் கழித்த பிறகும், சிறு நீர்ப்பையில் முழுமையாக வெளியேற்றப்படாத சிறுநீர் தங்கியிருப்பதுவும் முக்கிய காரணங்களாகும். சிறுநீர் வெளிச் செல்லும் பகுதியில் சிறுநீர் வழி கற்கள் அடைத்திருந்தாலும், பிற சுற்றியுள்ள அமைப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளாலும், நரம்பியல் பிரச்சினைகளினாலும், சிறுநீர்ப்பையில் சிறுநீர் தங்கி வெளியேற முடியாமல் இருத்தல், சிறுநீர் செல்ல வேண்டும் என்ற உணர்வு இல்லாது போன்ற காரணங்களால் சிறுநீர் வழியாமல் தங்கி அழற்சி ஏற்படும். சிலருக்குச் சாப்பிட்டவுடன் எதுகளித்து மேலே உணவும், புளிச்ச ஏப்பமும் வருவது போன்று சிறுநீர் புறவழி தாரைக்குச் செல்லாமல் சிறுநீரகப் பையிலிருந்து மேல்நோக்கி சிறுநீர் குழாயினுள் சென்று விடுவதாலும் அழற்சி ஏற்படுகிறது.

**அழற்சியை தடுப்பதற்கு உடல் பெற்றுள்ள இயற்கை அரண்கள்?**

சிறுநீர் தங்குதடையின்றி வேகமாகவும், விரைவாகவும் வெளியேறுகின்ற போது, அழற்சி ஏற்பட வாய்ப்பில்லை. முறையாக சிறுநீர்ப்பை நிறைந்து, சிறுநீர் கழிக்கத் தோன்றும்போது சிறுநீரை கழித்து 'சிறுநீர்ப் பையை' காலிசெய்து விட்டாலும், சிறுநீர் தங்கி அழற்சி ஏற்பட வாய்ப்புகள் இல்லை.

'சிறுநீர்' செல்லும் வழித்தடங்களில் உண்டாக்கப்படும் "கிளைக்கோஸ் அமீ னோ கிளைகன்ஸ்" எனப்படும் புரதப் பொருளாலும் பல்வேறு கிருமிகள் வளர்வது தடுக்கப்படுகிறது. குறிப்பாக, ஈகோலை என்ற கிருமியோடு இது இணைந்து, சிறுநீர்க் குழாயின் உட்சுவரில் படிவதை தடுத்து விடுகிறது.

சிறுநீர் குழாய், தாரைகளுக்கு உட்பகுதியில் அமைந்துள்ள மெல்லிய சவ்வுப் படலம் மேற்கூறிய புரதப் பொருளை உற்பத்தி செய்வதாலும், தற்காப்பு புரதப் பொருள்களை உற்பத்தி செய்வதாலும், கிருமிகள் வளர்வது தடுக்கப்படுகிறது.

ஆனால் மேற்கூறிய பல்வேறு தடுப்பு முறைகளையும் முன்பு கூறிய காரணங்கள் கடந்து வந்துவிடும்போது, 'அழற்சி' ஏற்பட்டுவிடுகிறது.

மற்றவர்களை விட, ஒரு சில பெண்களுக்கு அழற்சி அடிக்கடி ஏற்படுகிறது. இது எதனால் ஏற்படுகிறது என்று பார்த்தால் அவர்களுக்கு இவ்வாறான பிரச்சினைகள் தொந்தரவுகள் ஏதாவது இருந்து கொண்டிருக்கும்.

அதாவது, சிறுநீர் செல்லும் வழிப்பாதை அசாதாரணமாய் இருக்கும், சிறுநீர் செல்லும் வழிப்பாதை அடைபட்டிருக்கலாம், கற்கள் தோன்றியிருக்கலாம், சிறு நீர்ப் பையிலிருந்து சிறுநீர் மேல்நோக்கிச் செல்லலாம், நரம்பியல் பிரச்சினை இருக்கலாம், சிறுநீரை வெளியேற்ற 'செயற்கை' குழாயை பொருத்தியிருக்கலாம், ஆணின் சுரப்பு உறுப்பில் அழற்சி ஏற்பட்டிருக்கலாம், சிறுநீரகத்தில் கட்டி தோன்றியிருக்கலாம், அதிகமாக உடல்வலி மருந்துகளைக் குடித்து சிறுநீரகம் பாதிப்பு அடைந்திருக்கலாம், சிறுநீரக திசுக்கள் நலிவடைந்து நார் திசுக்கள் உருவாகி இருக்கலாம், நீரிழிவு நோய் இருக்கலாம், உடலின் எதிர்ப்புத்திறன் குறைவாக இருக்கலாம்.

**அழற்சியை எவ்வாறு அறிந்து கொள்வது?**

அழற்சி பலருக்கும் ஏற்பட்ட போதிலும், அது ஒரே மாதிரியான பிரச்சினையை அனைவருக்கும் ஏற்படுத்து

(11 ஆம் பக்கம் பார்க்க)

# பெண்களுக்கு அடிக்கடி ஏற்படும் சிறுநீரக புறவழி அழற்சி நோய்?

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதில்லை. பலருக்கும் பலவிதமான பிரச்சினைகளை உண்டாக்கும். அதாவது, எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தாமலேயே இருக்கலாம். சிலருக்கு சிறுநீர் புறவழி தாரையில், சிறுநீர்ப் பையில் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம், சிலருக்கு ஆணின் சுரப்பு உறுப்பில் பிரச்சினைகள் ஏற்படும், சிலருக்கு சிறுநீரக அழற்சியும், அதில் 'சீழ்' தோன்றிப் பிரச்சினைகள் ஏற்படும், சிலருக்கு கிருமிகள் இரத்தத்தில் கலந்து மயக்கமடைந்து, நினைவை இழக்கும் நிலைமையும் ஏற்படும்.

**அழற்சிக்கான அறிகுறிகள்?**

பொதுவாக, அழற்சி ஏற்படுகின்றவர்களுக்கு, அடிக்கடி சிறுநீர் கழிக்கத் தோன்றும். நீர் கழிக்கின்றபோது எரிச்சலும், வேதனையும் இருக்கும். எரிச்சலுடன் எரிவு ஏற்படுகின்றபோது வலியும், சிறுநீர் புறவழித்தாரையில் இருக்கும். சிறுநீர்ப்பையில் அழற்சி இருந்தால், சிறுநீர் கழித்தவுடன் அடிவயிற்றில் வேதனையும் எரிச்சலும் உண்டாகும், சிறுநீர் கழித்தவுடன் மீண்டும் சிறுநீர் கழிக்கத் தோன்றும், சிலருக்கு லேசான காய்ச்சல் இருக்கும். சிலருக்கு அடிவயிற்றில் அழுத்தினால் 'வலி' அதிகமாகும், சிறுநீர் பார்ப்பதற்கு கலங்கியதாக காட்சியளிக்கும், சிலருக்கு சிறுநீரில் பழுப்பு செல்களும் செல்லும்.

**சிகிச்சை முறைகள்?**

சிறுநீர் செல்லும் வழித்தடப் பகுதிகளில் ஏற்படும் பல்வேறு அழற்சிகளுக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து சிகிச்சை செய்ய வேண்டும். எந்தக் கிருமியால் அழற்சி ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடித்து, அதற்குரிய நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை குறிப்பிட்ட காலம் வரை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிருமியும், ஒவ்வொரு குறிப்பிட்ட மருந்துக்கு கட்டுப்படும்.

இந்த மருந்துகளை எடுக்கத் தொடங்கிய இரண்டு நாள்களிலேயே நோயாளிக்கு பிரச்சினை குறையத் தொடங்கும். பெரும்பாலும், இந்த மருந்துகளை விடாமல் 5 நாள்கள்வரை எடுத்துக்கொள்ள வேண்டும். மருந்துகளை எடுத்து முடித்த பின், 7 ஆவது நாள் மீண்டும் சிறுநீர் பரிசோதனை செய்து கிருமிகளின் அளவு குறைந்துவிட்டதா? என அறிய வேண்டும்.

இவ்வாறு சிறுநீர் பரிசோதனை செய்கின்றபோது, அதில் முன்பு கண்ட கிருமிகள் குறையாமல் இருந்தாலும், மீண்டும் தோன்றினாலும், அந்த நோயாளிக்கு நீரிழிவு நோய் இருக்கலாம். அல்லது சிறுநீர் வெளியிட்டு வருகின்ற பாதைகளில் உறுப்புகளில் பிரச்சினை இருக்கலாம். அவற்றையும் சரி செய்யவேண்டும்.

சிறுநீரக அழற்சி, சிறுநீர்க் குழாய் அழற்சி நோய்களுக்கு, வைத்தியர் பரிந்துரை செய்யும் மருந்துகளை மாத்திரமே எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் விரும்பிய படி மருந்துகளை எடுக்கக்கூடாது.

தினமும் 2 லீற்றர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும், சிறுநீரை அடிக்கடி வெளியேற்ற வேண்டும், சிறுநீரை முழுவதுவுமாக கழிக்க வேண்டும், சிறுநீர் மேல்நோக்கி செல்லும் பிரச்சினை உள்ளவர்கள் இரவுநேர தூக்கத்துக்கு முன்னர் இருமுறை சிறுநீர் கழிக்க வேண்டும். உடலுறவு கொள்ளும் முன்பாகவும், அதன் பிறகும் சிறுநீர் கழிக்க வேண்டும், உடலுறவுக்கு முன்னால் 0.5 சதவீதம் நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை சிறுநீர் புறவழித் துளையைச் சுற்றி பூசவேண்டும்.

**டாக்டர் முத்துச்செல்லக்குமார்**
MD



# 31 வருட கல்விச் சேவையாற்றிய ஆசிரிய ஆலோசகருக்குப் பாராட்டு

**(வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் எம்.பி.எம்.யூசுப் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றதை முன்னிட்டு பிரிவுபசார நிகழ்வு நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.எல்.எ.மஜீட் ஏற்பாட்டில் கல்வி சார் உத்தியோகத்தர்கள், நலன்புரி ஒன்றியத் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் வலயக் கல்விப் பணிமனையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு ஆசிரிய ஆலோசகர் யூசுப்பின் சேவைகள்



பற்றிப் பலரும் பாராட் டினர்.

இறுதியில் அவருக்குச் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசில்களை வழங்கினர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான மஜீத், யசீர்அறபாத், நிதர்சினி, நிலோபரா உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியில் ஓய்வு பெறும் ஆசிரிய ஆலோசகர் யூசுப் ஏற்புரை வழங்கினார்.





# இறக்காமம் அஞ்சல் குடும்பத்தின் பாராட்டு நிகழ்வும் கௌரவிப்பும்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

இறக்காமம் கட்டுப்பாட்டு அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்று சென்றவர்களுக்கான கௌர விப்பும் பிரியாவிடை வைபமும் இறக் காமம் அஞ்சல் அலுவலக அதிபர் ஆர்.எம்.எம்.வாசினி ரத்னாயக்க தலை மையில் இறக்காமம் அஞ்சல் அலு வலகத்தில் அண்மையில் இடம்பெற் றன.

இந்த நிகழ்வில் அம்பாறை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ். பிரியந்த பிரதம அதிதியாகவும், இறக்காமம் கோட்டக் கல்வி அதிகாரி யூ.எல். மஹ்மூதுலெவ்வை, இறக்காமம் அஸ்ரப் தேசிய பாடசாலை பிரதி அதிபர் ஏ.ஆர்.எம்.அமீன், அதிபர் எம்.எஸ். லாஹிர், இறக்காமம் ஜாமியுத் தையார் பள்ளிவாசல் தலைவர் முகம்மது அலியார் மற்றும் ஆசிரியர் இஸ்ஹாக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் 40 வருடங்கள் தபால் தரம் பிரிப்பாளராக இறக்காமம் தபால் அலுவலகத்தில் சேவையாற்றி சென்ற எச்.எல்.ஏ. பௌசுல் அமீன் மற்றும் 34 வருடங்கள் தபால் உத்தி யோதராக கடமையாற்றி ஓய்வு பெற்ற எம்.எஸ்.எம்.சமூக்கூன் ஆகியோர் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

# புதிய நியமனம்...!



(அஸ்ஹர் ஆதம்)
கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிதி) கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கணக்காளராக இருந்த சம்மாந்துறையைச் சேர்ந்த அப்துல் மஜீத் முகமது றபீக் நியமிக்கப்பட்டுள்ளார்.




# வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலய பரிசளிப்பு விழாவும் ‘ஏர்’ வெளியீடும்!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலய (தேசிய) பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஏர் சஞ்சிகை வெளியீடும் பாடசாலை அதிபர் கி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனும், சிறப்பு அதிதியாக கல்குடா கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.தட்சணாமூர்த்தியும், விசேட அதிதிகளாக கிழக்கு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ப.இளங்கோ, வைத்தியர் இ.சிறிநாத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பிரதேசத்தின் மண் வாசனை கமழும் கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை பிரதிபலித்துக் காட்டும் வகையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடைய ஆங்கங்களை உள்ளடக்கிய ‘ஏர்’ சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலின் ஆய்வுரையை ஒய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.சுகுமாரன் தொகுத்து வழங்கினார்.

விளையாட்டு, கலை. பண்பாடு. மாணவர்களின் பாட அடைவு, பல்கலைக் கழகத் தெரிவு போன்றவற்றில் ஆர்வம் செலுத்திச் சாதனைகளைப் படைத்த மாணவர்கள் இதன் போது சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பொறியியல், விஞ்ஞானம், கலை மற்றும் வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் சாதனை படைத்த மாணவர்களுக்கும் இதன் போது ‘விஷ்ணு விருது’ வழங்கப்பட்டது.




# பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர்களது பங்களிப்பு வேலைத்திட்டம் கல்முனையில்

**(நூருல் ஹுதா உமர்,
அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் நீண்ட கால தேவையாக காணப்பட்ட பிளாஸ்டிக் கதிரைகள் பெற்றோர்களின் பங்களிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர்களின் பங்களிப்பு எனும் தெனிப்பொருளில் கதிரைகள் வாங்கிக் கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்றது.

கல்லூரி முதல்வர் எ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸிடம் உத்தியோக பூர்வமாகக் கதிரைகள் கையளிக்கப்பட்டன. சுமார் 250 பிளாஸ்டிக் கதிரைகள் இதன்போது வழங்கப்பட்டுள்ளன.







# மன்னார் புனித சவேரியார் மெய்வல்லுனர் போட்டிகள்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாட சாலையின் வருடாந்த மெய்வலலுனர் விளையாட்டுப் போட்டிகள் கடந்த செவ்வாய்கிழமை (05) பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றன.

இந்தக் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரன் மற்றும் விஷேட அதிதிகளாக எந்திரி ஏ.தேவநான்ட் , கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி.சந்தியோகு, எந்திரி விமலேஸ் வரன் மற்றும் வைத்திய கலாநிதி அன்ரனிதாஸ் தீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# யாழ். மத்தி தடுமாற்றம்

வடக்கின் பெரும் போர் கிரிக்கெட்டில் இரண்டாவது நாளான இன்று தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி தடுமாற்ற நிலையில் உள்ளது.

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்ட போட்டி நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

117 ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டி வழமை போல இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகின. ஆட்டம் தொடர்ந்து இன்று மற்றும் நாளையும் என மூன்று நாள்கள் நடைபெறும்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி, 56.4 ஓவர்களை எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பின்னர் நேற்றே பதிலுக்குத் தனது முதலாம் இனிங்சில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி 30.5 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றபோது முதலாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது. இந் நிலை யில், ஆட்டம் மீண்டும் இன்று ஆரம்பித்தது. தனது இனிங்சைத் தொடர்ந்த பரியோவான் கல்லூரி 70.4 ஓவர்களை எதிர்கொண்ட நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்ங்களை சேர்த்தது.பின்னர் 71 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில், தனது இரண் டாவது இனிங்சை யாழ். மத்திய கல்லூரி ஆரம்பித்தது.

ஆட்ட நேரம் முடிய சிறிது நேரம் இருக்கையில் 11 ஓவர்களை எதிர்கொண்ட நிலையில் இரு விக் கெட்டுகளை இழந்து 24 ஓட்டங்களைச் சேர்த்து ஆடிக்கொண்டிருந்தது. நாளை மூன்றாம் நாள் ஆட்டமாகும்.





# உதவும் கரங்கள் சமூக சேவை உறுப்பினர்களுக்கு முதலுதவி

(எம்.எம்.றம்ஸீன்)

அம்பாறை மாவட்டம் மருதமுனை உதவும் கரங்கள் சமூக சேவை நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு முதலுதவி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டுவரும் இந்த நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு முதலுதவி பயிற்சிகளை வழங் குமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பூரண ஒத்துழைப்புடன் உதவும் கரங்கள் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலுதவி பயிற்சிச் செயலமர்வு அண்மையில் மருதமுனை பொது நூலகக் கட்டடத்தில் இடம்பெற்றது.

உதவும் கரங்கள் சமூக சேவை நிறுவனம் மற்றும் மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவருமான எம்.ஐ.எம்.முஹர்றப் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் மற்றும் உணவுப் பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் மற்றும் தொற்றா நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

இதன்போது குறித்த நிறுவனத்தின் சார்பில் 40 பேர் கலந்துகொண்டனர். கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றுதழ்கள் வழங்கப்பட்டன.



# இளைஞர் விழிப்பூட்டல் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சோஷலிச இளைஞர் சங்கத்தால் இளைஞர்களை விழிப்பூட்டும் நிகழ்வு கல்முனையில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் இளைஞர் படையின் கல்வி பிரிவின் செயலாளர் தோழர் மகேஷ் அம்பேபிட்டிய கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கல்முனைத் தொகுதிச் செயற்பாட்டாளர்கள், சோஷலிச மாணவர் சங்கத்தின் செயற்பாட்டாளர் , ஆசிரியர் சேவை சங்கத்தின் பிராந்திய செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.





# காத்தான்குடியில் இரத்ததான முகாம்

(எம்.எம்.றம்ஸீன்)

காத்தான்குடியில் அல் பஜ்ர் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் அண்மையில் இடம்பெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்திய சாலை இரத்த வங்கிக்கு வழங்குவ தற்காக இந்த இரத்த தான முகாம் நடைபெற்றது.

இதன் போது இந்த தானம் செய்த வர்களுக்கு அல் பஜ்ர் நலன்புரி அமைப்பால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

அல் பஜ்ர் நலன்புரி அமைப்பின் தலைவரும்சமூகசெயற்பாட்டாளருமான எஸ்.ஏ.கே.பழீலுர் ரஹ்மான் தலை மையில் நடைபெற்ற இதன் ஆரம்ப வைபவத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



காத்தான்குடி ஆதார வைத்திய சாலை அத்தியட்சகர் டாக்டர் ஜாபீர், காத்தான்குடி ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி அலீமா அப்துர் ரஹ்மான் உட்பட பிரிவு கிராம உத்தியோகத் தர், சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் அல் பஜ்ர் நலன்புரி அமைப் பின் உறுப் பினர்கள் கலந்து கொண் டனர்.

# தரம் ஒன்று மாணவரிடையே ஆங்கில மொழி ஊக்குவிப்பு

(த.சுபேசன்)

தரம் ஒன்று மாணவர்களின் ஆங் கில மொழித் திறனை ஊக்குவிக்கும் வலய மட்ட ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை யில் இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக தென் மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவி ருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜேசுதாசன், கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் மற்றும் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு நாடளாவிய ரீதியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.





# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(பாறுக் ஷிஹான்)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நான்காம் கிராமத்தில் உள்ள வேம்படி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கொப் பிகள் மற்றும் புத்தகப் பைகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ் பராஜ் துஷானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



# கல்முனைக் கடை உரிமையாளருக்கு நிரந்தர காணி உறுதி வழங்க முடிவு!

## ஹரீஸ் எம்.பி. நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர பிரதேசத்தில் உள்ள தற்காலிக காணி அனுமதிப் பத்திரம் உள்ள கடை உரிமையாளர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் (06) காணி ஆணையாளர் நாயகத்தை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது ஜனாதிபதியின் "உறுமய" திட்டத்தின் கீழ் நிரந்தரமாகக் காணி உறுதிகளை வழங்க காணி ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார் என்று உறுதியளித்துள்ளார்.



கல்முனை மாநகர பிரதேசத்தில் உள்ள கடை உரிமையாளர்கள் மத்தியில் மிக நீண்டகாலமாக நிலவிவரும் இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கடந்த வாரம் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதி செயலாளர் சமன் எக்கநாயக்கவை சந்தித்து பேசினார்.

அதனை அடுத்து அவர்கள் வழங்கிய துரித ஒத்துழைப்பால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டணி இறுதியாவதில் இழுபறி; முதல்வருடன் திருமாவளவன் பேச்சு!



கூட்டணி இறுதியாவதில் இழுபறி நீடித்து வருகிறது. இந்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் பணிகளை முதலில் தொடங்கிய கட்சி தி.மு.க. இந்த முறை கூட்டணியில் இருந்து இந்தியக் ஜனநாயகக் கட்சி விலகியதால், அதற்கு பதில் கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யமைச் சேர்க்க முடிவெடுத்துள்ளது. மேலும், 23 இடங்களில் தி.மு.க. போட்டியிடவும், 17 இடங்களை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கவும் முடிவெடுத்தது.

அதேபோல், போட்டியிடும் தொகுதிகளில் சிலவற்றை மாற்றிப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானித்திருந்தது. இதன் அடிப்படையிலேயே பேச்சு நடத்தப்பட்டது.

இதில், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ராமநாதபுரம், கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சிக்கு நாமக்கல் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக, காங்கிரஸ் கட்சிக்கு 6 மற்றும் புதுச்சேரி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 2, மதிமுகவுக்கு 1 தொகுதிகளை ஒதுக்கும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மேலும், காங்கிரஸ் கட்சி தனக்கு ஒதுக்கப்படும் தொகுதியில் ஒன்றை ம.நீ.ம. கட்சிக்கு வழங்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது. ஆனால், இதைக் காங்கிரஸ் ஏற்கவில்லை.

இது தவிர, வி.சி.க. தனக்கு கூடுதலாக ஒரு பொது தொகுதியை வழங்குவதுடன், மூன்றிலும் தங்கள் சின்னத்தில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இதனால் கூட்டணி இறுதியாவதில் இழுபறி நீடித்து வருகிறது. கூட்டணி இழுபறி இருந்து வரும் நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினை வி.சி.க. தலைவர் திருமாவளவன் சந்தித்துப் பேசி வருகிறார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடந்து வருகிறது. கூட்டணி இழுபறிக்கு மத்தியில் முதல்வரை சந்தித்து திருமாவளவன் ஆலோசித்து வருகிறார்.

முன்னதாக, கூடுதல் தொகுதி கேட்டு முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பேசுவோம் என்று திருமாவளவன் தெரிவித்த நிலையில் இந்தச் சந்திப்பு நடந்து வருகிறது.

# மீண்டும் 22 இல் தமிழகத்துக்கு வருகை தரவுள்ளார் பிரதமர் மோடி!



பிரதமர் மோடி மார்ச் 22 ஆம் திகதி மீண்டும் தமிழகம் வர இருக்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது. பிரதமர் மோடி ஜனவரி 2 ஆம் திகதி திருச்சிக்கு வந்து, விமான நிலைய புதிய முனையம் உள்ளிட்ட திட்டங்களை தொடங்கி வைத்தார்.

2 ஆவது முறையாக ஜனவரி 19 ஆம் திகதி தமிழகம் வந்த அவர், சென்னையில் கேலோ இந்தியா போட்டிகளை தொடங்கி வைத்தார். 20, 21 ஆம் திகதிகளில் திருச்சி ஸ்ரீ ரங்கம், ராமேஸ்வரம், தனுஷ்கோடி ஆகிய கோயில்களுக்குச் சென்று வழிபட்டார்.

3 ஆவது முறையாக பெப்ரவரி 27 ஆம் திகதி பல்லடத்தில் நடந்த 'என் மண், என் மக்கள்' யாத்திரை நிறைவு விழா பொதுக் கூட்டத்திலும், மதுரையில் நடந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். மீனாட்சி அம்மன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். 28 ஆம் திகதி தூத்துக்குடியில் நலத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

திருநெல்வேலியில் நடந்த பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பங்கேற்றார். 4 ஆவது முறையாக கடந்த 4 ஆம் திகதி தமிழகம் வந்த மோடி, கல்பாக்கத்தில் விரைவு ஈனுலையை தொடங்கி வைத்தார்.

சென்னை நந்தனத்தில் நடந்த பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பங்கேற்றார். இந்த நிலையில், இந்த ஆண்டில் 5 ஆவது முறையாகப் பிரதமர் மோடி தமிழகம் வரவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. மக்களவைத் தேர்தலை முன்னிட்டு முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை பா.ஜ.க. வெளியிட்டது. விரைவில் 2 ஆம் கட்ட பட்டியலை வெளியிடுவதற்கான பணிகளை தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

இதில், தமிழக வேட்பாளர்கள் இடம்பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. இந்த சூழலில், வரும் 22 ஆம் திகதி மோடி தமிழகம் வர உள்ளார் என்றும் குறிப்பாகக் கொங்கு மண்டலம் அல்லது தென் மாவட்டங்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் மோடி பேசுவார் என்றும் கூறப்படுகிறது.

# தமிழக மக்களவைத் தேர்தல் பட்டியலில் பா.ஜ.க. சார்பில் பிரபலங்கள் உள்ளனர்

## உத்தேச வேட்பாளர் பட்டியல் கட்சி மேலிடத்துக்கு

தமிழக பா.ஜ.க. சார்பில் மக்களவைத் தேர்தலுக்கான உத்தேச வேட்பாளர் பட்டியல் கட்சி மேலிடத்தில் அளிக்கப் பட்டுள்ளது. இதில் தமிழக பா.ஜ.க. பிரபலங்கள் பலர் இடம்பெற்றுள்ளனர். தமிழ் நாட்டில் 39 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. இவை அனைத் திலும் பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. போட்டியிடுகிறது. இதற்கான உத்தேச வேட்பாளர் பட்டியல், தமிழ் நாடு பா.ஜ.க. மையக் குழுவினரால் புதன்கிழமை கட்சி மேலிடத்தில் அளிக் கப்பட்டுள்ளது.

இதற்காக, மையக்குழுவின் உறுப் பினர்களான மாநில பா.ஜ.க. தலை வர் கே.அண்ணாமலை, மாநில அமைப்பு பொதுச் செயலாளர் கேசவ விநாயகம் உள்ளிட்டோர் டில்லி வந் திருந்தனர். இந்தப் பட்டியலில் பா.ஜ.க. உறுதியாக வெல்லும் தொகுதிகளாக 10 தொகுதிகள் இடம் பெற்றுள்ளன.

2014 தேர்தலில் போட்டியிட்டு மத் திய அமைச்சரான பொன்.ராதாகிருஷ் ணன் பெயர் மீண்டும் கன்னியாகுமரி யில் இடம் பெற்றுள்ளது. இதே தொகு தியை எதிர்பார்த்து பா.ஜ.கவில் இணைந்ததாக கருதப்படும் விஜய தரணியின் பெயரும் அதில் உள்ளது. அதிக பிரபலங்கள் பரிந்துரைக்கப்பட்ட தொகுதியாக கோயம்புத்தூர் உள்ளது.

இங்கு பா.ஜ.க. தலைவர் அண்ணா மலை, தேசிய மகளிர் பிரிவின் தலை வர் வானதி சீனிவாசன், தொழில் அணி யின் துணைத் தலைவர் செல்வகுமார் ஆகியோரின் பெயர்கள் உள்ளன. இவர்களில் அண்ணாமலையின் போட்டியால் பிற தொகுதிகளுக்கான



பிரச்சாரக் கூட்டங்களில் அவர் பங் கெடுப்பது பாதிக்கும் நிலை உள்ளது. இதனால், அண்ணாமலையின் போட்டி உறுதி செய்யப்படவில்லை.

கோவை சட்டசபை உறுப்பினர் வென் றிருப்பதால் வானதிக்கும் இத்தொகுதி சாதகமாகப் பார்க்கப்படுகிறது. கோவையை அடுத்து சென்னை தொகுதிகளில் பா.ஜ.க. பிரபலங்கள் அதிகம் உள்ளனர். தென் சென்னைக் கான பரிந்துரையில் தமிழக பா.ஜ.க. துணைத் தலைவர்களான திருப்பதி நாராயணன், கரு.நாகராஜன் ஆகி யோர் உள்ளனர். தமிழகத்தில் தென் சென்னையில் மட்டுமே பா.ஜ.கவுக்கு அதிக வாக்குகள் உள்ளன.

இங்கு பா.ஜ.கவுக்கு சுமார் 2.5 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர் என்று கூறப்படுகிறது. பா.ஜ.கவின் உத்தேசப் பட்டியலில் இடம்பெற்ற ஒரே பிரபல பிராமணராக, நாராயணன் உள்ளார். தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு தென் சென்னையில் போட்டி யிடுவார் என பேசப்பட்டது. தற்போது இந்தப் பேச்சுகள் நின்று விட்டது எனி னும் இவரது பெயரையும் அதிக தொண்டர்கள் உத்தேசப் பட்டியலுக்கு பரிந்துரைத்துள்ளனர்.

மத்திய சென்னைக்கு குஷ்பு மற்றும் வினோஜ் பி.செல்வம் பரிந்துரைக்கப் பட்டுள்ளனர். இவர்களில் குஷ்பு 2021 சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்டு இரண்டாம் இடம் பெற்றார். இவர் திருப்பூர் அல்லது பொள்ளாச்சியில் போட்டியிட விரும்பு கிறார் என்று தெரிகிறது. வட சென்னைக் கான பெயர்களில் மாநில துணைத் தலைவர் பால் கனகராஜ் இடம் பெற்றுள்ளார்.

இதுபோல் திருநெல்வேலிக்கான பெயர்களில் தமிழக பா.ஜ.க. சட்டப் பேரவை கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளார். விருது நகருக் கான போட்டியில் மாநிலப் பொதுச் செயலாளரான பேராசிரியர் சீனிவாசன் மற்றும் பா.ஜ.க. மாவட்டச் செயலாளர் பாண்டுரங்கன் உள்ளனர்.

சிவகங்கையில், ஆன்மிகம் மற்றும் ஆலயங்கள் வளர்ச்சிப் பிரிவின் எம். நாச்சியப்பனும் தென்காசியில் ஆனந் ஐயாசாமியும் பரிந்துரைக்கப்பட்டுள்ள னர்.

தென்காசியில் ஆனந்தின் போட் டியை விரும்பாமல் தான் புதிய தமி ழகம் டாக்டர் கிருஷ்ணசாமி , என்டி ஏயில் இருந்து வெளியேறியுள்ளார் என்று கூறப்படுகிறது. தூத்துக்குடிக் கான பெயர்களில் அ.தி.மு.கவிலிருந்து பா.ஜ.கவுக்கு வந்த சசிகலா புஷ்பா மற்றும் கே.எம்.ராதாகிருஷ்ணன் உள்ளனர்.


# சென்னை அப்போலோவில் அனுமதிக்கப்பட்டார் அஜித்!

படப்பிடிப்புக்காக அஜர்பைஜான் செல்ல இருந்த நடிகர் அஜித்குமார், சென்னையில் தனியார் மருத்துவ-மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திரைப்பட முன்னணி நடிகர் அஜித்குமார் (52). துணிவு படத்தை தொடர்ந்து, மகிழ் திருமேனி இயக்கத்தில் ‘விடாமுயற்சி’ என்கிற படத்தில் நடித்து வருகிறார்.

அஜர்பைஜான் நாட்டில் இதற்கான படப்பிடிப்பு நடந்து வருகிறது. கடந்த மாதம் சென்னை வந்த அஜித்குமார் உள்ளிட்ட படக்குழுவினர் மீண்டும் அஜர்பைஜான் செல்ல திட்டமிட்டிருந் தனர்.

இந்த நிலையில், திடீரென்று அஜித் குமாருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்ட தால், சென்னை அப்போலோ மருத் துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

அவரது உடல் நிலையைப் பரிசோ தனை செய்து, தேவையான சிகிச்சை



களை மருத்துவர்கள் அளித்துவரு கின்றனர். ஓரிரு நாளில்சிகிச்சை முடிந்து அஜித்குமார் வீடு திரும்புவார் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக நடிகர் அஜித்குமா ரின் மேலாளர் சுரேஷ் சந்திரா கூறிய தாவது,

‘விடாமுயற்சி’ படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு முடிந்துள்ள நிலையில், இரண்டாம் கட்ட படப்பிடிப்பு அடுத்த வாரம் அஜர்பைஜானில் தொடங்க வுள்ளது. அஜித்குமார் அங்கு செல்லவுள்ளார். அதற்காக, வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக, சென்றுள்ளார். அவரது உடல் நலம் நன்றாக உள்ளது. ஓரிரு நாளில் மருத் துவ மனையிலிருந்து திரும்புவார் என்று கூறினார்.

# இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அமைதியான உறவுக்கு விரும்புகின்றன

## அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மாத்யூ மில்லர்

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அமைதியான உறவை பேணுவதற்கு விரும்புகின்றன என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த திங்களன்று பாகிஸ்தானின் புதிய பிரதமராக இரண்டாவது முறையாகவும் ஷாபாஸ் ஷெரீஃப் பதவியேற்றார்.

அதனைத் தொடர்ந்து அவருக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மாத்யூ மில்லர், இந்திய பிரதமரின் வாழ்த்து அறிக்கையை நாங்கள் நிச்சயமாக வரவேற்கிறோம்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனான உறவை அமெரிக்கா மதிக்கிறது.



இரு நாடுகளும் பயனுள்ள மற்றும் அமைதியான உறவைக் கொண்டிருப்பதை பார்க்க நாங்கள் விரும்புகிறோம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தைகளை நாங்கள் வரவேற்போம்.

ஆனால், பேச்சுகளின் வேகம், நோக்கம் மற்றும் தன்மை ஆகியவை இந்தியாவும் பாகிஸ்தானும் தீர்மானிக்க வேண்டிய விடயம் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த 2019 ஆம் ஆண்டில், ஜம்மு-காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கிய இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவு ரத்துக்குப் பிறகு, ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த இந்தியா-பாகிஸ்தான் உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரோன்களை உக்ரைனுக்கு வழங்கவுள்ள பிரித்தானியா



ரஷ்யாவுடனான போரில் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு பிரித்தானியா 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரோன்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

உக்ரைனின் தலைநகர் கீவ்வுக்கு நேற்று முன்தினம் (07) பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் கிராண்ட் ஷாப்ஸ் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, கிராண்ட் ஷாப்ஸ் அறிவித்த +325 மில்லியன் முதலீட்டு தொகுப்பின் ஒரு பகுதியாக உக்ரைனுக்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரோன்களை வழங்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரித்தானிய பிரதமரால் அறிவிக்கப்பட்ட +200 மில்லியன் ட்ரோன் ஆதரவு தொகுப்பை விட இந்த தொகுப்பில் கூடுதல் ட்ரோன்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கண்காணிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் முதல் நபர் பார்வை ட்ரோன்கள் பெருமளவு வழங்கப்படவுள்ளது.

அவற்றின் மூலம் எதிரி நிலைகள் மற்றும் நடமாட்டங்களை கண்காணித்து போர்க் களத்தில் உக்ரைனிய துருப்புக்களுக்குப் பலத்தை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பிரித்தானியாவால் வடிவமைக்கப்பட்ட ஆயிரம் திசை தாக்குதல் ட்ரோன்களும் வழங்கப்படவுள்ளன.

உக்ரைனிய படைகளுக்கு குறிப்பாக நாட்டின் கடற்கரையை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு மற்றும் கடல் ட்ரோன்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேட்டோ அமைப்பில இணைந்தது சுவீடன்!

நேட்டோ அமைப்பில் 32 ஆவது நாடாக இணைந்தது சுவீடன். வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு ஒரு ராணுவ கூட்டமைப்பு ஆகும்.

இந்த அமைப்பில் இணையக்கோரி 2022 ஆம் ஆண்டு சுவீடனும், பின்லாந்தும் விண்ணப்பித்தன.

இதில் கடந்த 2023 ஆம் ஆண்டு நேட்டோ அமைப்பில் பின்லாந்து அதிகார பூர்வமாக இணைந்தது.

இந்த நிலையி ல் 2 ஆண்டு முயற்சிக்குப் பின்னர் 32 ஆவது நாடாகச் சுவீடனும் நேட்டோ அமைப்பில் இணைந்தது.

# பாகிஸ்தானில் 2023 ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 213 சிறுவர் துஷ்பிரயோகம்

பாகிஸ்தானில் 2023 ஆம் ஆண்டில் 4,213 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அந்த நாட்டின் அரச சார்பற்ற நிறுவனமான சாஹில் அமைப்பும் தேசிய மனித உரிமைகள் ஆணையமும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அந்தப் புள்ளி விவரத்தின்படி, கடந்த ஆண்டு சராசரியாக நாளொன்றுக்கு சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல், குழந்தைகள் காணாமல் போதல் மற்றும் குழந்தை திருமணம் உட்பட அனைத்து வகையான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறிக்கையின்படி, துஷ்பிரயோகத்துக்கு ஆளான குழந்தைகளில் 53 வீதம் பெண்கள் மற்றும் 47 வீதம் சிறுவர்கள். மேலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைகள் 6 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள்.

அந்த வயதில் பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளே அதிகம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பக்கங்கள் - 3

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 08/03/2024


### டொரன்டோவில் வார இறுதியில் கடும் மழை, குளிர்ந்த வானிலை!

ஒன்ராரியோ, மார்ச் 08

இந்த வார இறுதியில் டொரன்டோவில் கடும் மழை பெய்யக் கூடும் என 'என்வைரன்மென்ட் கனடா' தெரிவித்துள்ளது.

C2




# ஒட்டாவாவில் 6 கொடூரக் கொலைகளின் சூத்திரதாரி கீழ் வீட்டில் வசித்த இளைஞர்

## இப்போது அவர் விளக்கமறியலில்

## 13ஆம் திகதி மேல் விசாரணைகள்



ஒன்ராரியோ, மார்ச் 08

**கனடாவை உலுக்கிய படுகொலைச் சம்பவத்தில் 19 வயதுடைய பெப்ரியோ டி சொய்சா என்பவர் பிரதான சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.**

**ஓட்டாவாவில் இடம்பெற்ற மிகவும் மோசமான படுகொலைச் சம்பவம் எனப் பொலிஸார் இதனை குறிப்பிடுகின்றனர்.**

**அப்பாவி மக்கள் மீது முன்னெடுக்கப்பட்ட மிகவும் கொடூரமான வன்முறைச் செயலென ஒட்டாவாவின் பொலிஸ் பிரதான அதிகாரி எரிக் ஸ்டப்ஸ் தெரிவித்துள்ளார்.**

இந்தக் கொலைச் சம்பவத்தில் கத்தி மற்றும் கூரிய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்தச் சம்பவத்தில் தாய், நான்கு பிள்ளைகள் மற்றும் குடும்ப நண்பர் ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த தந்தை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்ற போதிலும், உயிருக்கு அச்சுறுத்தல் தருவதாக அது இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் நேற்று மார்ச் 7ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜரானபோது, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தந்தையுடனும், நான்கு சாட்சியங்களுடன் கதைக்க முயற்சிக்கக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபருக்கு சட்டத்தரணி ஒருவரை தேடுவதற்கான கால அவகாசத்துடன், வழக்கு விசாரணை மார்ச் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

35 வயதான தாயான தர்சனி ஏக்கநாயக்க, 7 வயதான மகன் இனுக்க விக்கிரமசிங்க, மற்றும் மூன்று மகள்மார்களான அஸ்வினி (நான்கு வயது), ரின்யா (2 வயது) மற்றும்

C2

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் பணியாளர்களின் பிரத்தியேகத் தகவல்கள் கசிந்திருக்கலாம்?

## பொலிஸார் மும்முர விசாரணை


பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்08

பிரிட்டிஷ் கொலம்பியாவின் கிராமப் புறங்களில் பணி புரிந்த அல்லது பணி புரியும் ஆயிரக்கணக்கான பணியாளர்களின் பிரத்தியேகத் தகவல்கள் கசிந்திருக்கலாம் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தமது விசாரணையின் போது சுமார் 20,000 பேரின் சமூகப் பாதுகாப்பு இலக்கங்கள் மற்றும் வீட்டு முகவரிகள் உள்ளடங்கிய ஆவணம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டமையைத் தொடர்ந்தே பொலிஸார் சுகாதாரப் பிரிவிடம் இது குறித்து விசாரிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த சுகாதாரப் பிரிவில் 2003ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர்களின் தகவல்களே கசிந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், நோயாளிகள் எவருடைய தகவல்களும் வெளியாகவில்லைப் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



## கியூபெக்கில் வாரஇறுதியில் கடும் மழை, பனிப் பொழிவு!


கியூபெக், மாரச்08

வார இறுதியில் கியூபெக்கில் மழை மற்றும் பனிப் பொழிவுக்கான வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமையன்று கியூபெக்கின் தென்பகுதியில் கடும் மழை பொழியும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கடந்து செல்லும் காற்றானது குளிர்ந்த வானிலையை ஏற்படுத்தும் எனவும், இது ஞாயிற்றுக்கிழமை வரை நீடித்து பனிப்பொழிவாக மாறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரஇறுதியில் பாதைகள் வழுக்கும் என்பதால், பாதசாரிகளும், வாகனங்களைச் செலுத்துபவர்களும் மிகவும் எச்சரிக்கையாக பயணிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.



## பிரிட்டிஷ் கொலம்பியாவில் நீடித்து வரும் அதிக காற்று வார இறுதியுடன் முடிவுக்கு!

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச்08

பிரிட்டிஷ் கொலம்பியாவில் நீடித்து வரும் அதிக காற்று இந்த வார இறுதியுடன் முடிவுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, தொடர்ச்சியான மழையும், பனிப் பொழிவும் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாதைகள் வழுக்கும் தன்மையுடன் காணப்படும் என்பதால், பாதசாரிகள் மற்றும் வாகனம் செலுத்துவோரை மிகவும் எச்சரிக்கையுடன் பயணிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வடபகுதியான வென்கூவர், கொக்கிட்லம் மற்றும் ஹோவ் சௌண்ட் பகுதிகளில், குளிரான வானிலையுடன், அதிக பனிப்பொழிவும் காணப்படும் என எதிர்வுகூறப் படுகின்றது.

### ஒட்டாவாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் பிறந்த கெல்லி (இரண்டரை மாதங்கள்) ஆகியோருடன், 40 வயதான அமரக்கோன் ஆகியோரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

இந்த குடும்பத்தினர் கனடாவிற்கு வருகை தந்து இரண்டு வருடங்களே ஆகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்பிழைத்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வரும் தந்தையின் பெயர் தனுஷ்க விக்கிரமசிங்க என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றின் ஆரம்ப காலப்பகுதியில் வருகை தந்த இந்த குடும்பத்தினர், ஒட்டாவாவில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்கு தொடர்ந்து வருகை தருபவர்கள் என ஒட்டாவா ஜெயவர்த்தனராமய புத்த பிக்கு தெரிவித்துள்ளார்.

மேற்படி சந்தேகநபர், குடும்பத்தினர் வசித்த வீட்டின் கீழ்ப்பகுதியில் கடந்த 2 மாதங்களாகவே வசித்து வந்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வரும் தந்தை தமது வேலை முடிந்து வீட்டிற்கு வந்த சந்தர்ப்பத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் சந்தேக நபருக்கு கடந்த வாரத்தில் 19 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மார்ச் 6 இரவு 10:52 மணியளவில் பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் அழைப்பு கிடைத்ததாக ஒட்டாவா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

படுகாயமடைந்த நபர் ஒருவர் வீதியில் விழுந்து கிடக்கிறார் எனவும், அவசர உதவிக்கு அழைக்குமாறு கோருகிறார் எனவும் இந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுக்கு எதிர்வீட்டில் வசிக்கும் பெண்மணி, புதன்கிழமை மாலை வீட்டு வாசலில் கூச்சலிடும் சத்தம் கேட்டதாகவும், சம்பந்தப்பட்ட சந்தேகநபர் வாசலில் அமர்ந்திருந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களுக்காக சம்பவ இடத்திற்கு அருகில் அமைந்துள்ள பூங்காவில், அயலவர்கள் கூடி அஞ்சலி செலுத்தினர்.

இந்தச் சம்பவம் தமது இதயத்தை கனக்கச் செய்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய அரசாங்கத்தின் அமைச்சருமான கெரி ஆனந்தசங்கரி தமது சமூக ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### டொரன்டோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வெள்ளிக்கிழமை மாலையும், நாளை சனிக்கிழமையும் இந்த மழைக் காலநிலை நிலவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

20 மில்லிமீற்றர் தொடக்கம் 40 மில்லிமீற்றர் வரை மழை பதிவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலையில் ஏற்படும் தாழமுக்கம் அதிக மழையை ஏற்படுத்தவுள்ளது.

சனிக்கிழமை இரவு மழை வலுத்துக் காணப்படுவதுடன், குளிர்ந்த வானிலையும் நிலவும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இஸ்ரேல் - பலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்து வோன் நகரில் நேற்று எதிரெதிர்ப் போராட்டங்கள்

ஒன்ராரியோ, மார்ச் 08

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்த இரு குழுக்களுக்கு இடையே நேற்று வோன் நகரில் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை பகுதியில் நிலம் விற்பனைக்குள்ளதாக கண்காட்சி நடத்தி வரும் இஸ்ரேலிய ரியல் எஸ்டேட் கண்காட்சி நேற்று கனடாவில் நிறைவுக்கு வந்தது.

இந்த நிகழ்வு இடம்பெற்ற இடத்தில், ஒரு பக்கத்தில் பலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்தும், மறுபுறத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்தும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இதன்போது, இஸ்ரேலுக்கு ஆதரவான போராட்டக்காரர்கள், இஸ்ரேல் யூதர்களின் நிலம், பலஸ்தீனம் விற்பனைக்கு இல்லை என்று கூக்குரல்களை எழுப்பியவாறு பாடல்களை பாடிக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கண்காட்சிக்கான அறிவித்தலில், டெல் அவிவ் மற்றும் ஹைபா போன்ற இஸ்ரேலிய நகரங்களில் விற்பனைக்குள்ள நிலங்கள் தொடர்பான நிகழ்வு என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பட்டியலில் மேற்குகரையின் பகுதிகளான நேவ் டேனியல், எப்ரத் மற்றும் மாலே அதுமிம் போன்ற பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளமையை கண்டிக்கும் வகையிலேயே தாம் போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள் எனப் பலஸ்தீன ஆதரவு போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.



# சீனாவில் காவலில் உள்ள இரு கனேடியர்களின் நலனிலும் கனடா சிரத்தை என்கின்றார் பிரதமர்

ஒன்ராரியோ, மார்ச்08

சீனாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு கனேடியர்களினதும் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு கனேடிய அரசாங்கம் உதவும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வியாழக்கிழமையன்று (மார்ச் 7) ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது குறிப்பிட்டுள்ளார்.

ஓட்டாவாவுக்காக உளவு பார்த்தார்கள் என மைக்கல் கொவ்ரிக் மற்றும் மைக்கல் ஸ்பேவர் ஆகியோர் சீன அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு கடந்த மூன்று வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பம் முதலே, இவர்கள் இருவருக்கும் கனடா தமது உதவிகளை வழங்கி வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காகவே, சீனா இந்தக் கைதுகளைச் செய்ததாகவும், எவ்வித நியாயப்படுத்தக் கூடிய காரணமும் இல்லை எனவும் ட்ரூடோ சீனாவை விமர்சித்துள்ளார்.

தடுப்புக் காவல் தொடர்பில் அரசாங்கத்துடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக இருவரினதும் சட்டத்தரணி கருத்து தெரிவித்துள்ள நிலையிலேயே, பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.